# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2266/36 - 2022 පෙබරවාරි මස 09 වැනි බදාදා - 2021.02.09

*2266/36 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**சப்ரகமுவ மாகாண சபை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்ரகமுவ மாகாணத்தின் ஆறாவது மாகாண சபையின் பதவிக் காலம் 2017 செப்டம்பர் 26 ஆம் திகதி அன்று முடிவடைந்ததால், 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம் கொண்ட சப்ரகமுவ மாகாண சபைச் சட்டத்தின் 27(அ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய அனுமதி வழங்கல்

*2022 ஆம் ஆண்டு சனவரி 01 முதல் திசெம்பர் 31 ஆம் திகதி வரை வருடத்திற்கான சேவைச் செலவினங்களை வழங்குதல், அந்த சேவை செலவினங்களுக்காக சப்ரகமுவ மாகாணத்திற்குள் கடனுதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரமளித்தல், அக்காலப்பகுதியில் சப்ரகமுவ மாகாண சபையின் சில நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல், அந்த நடவடிக்கைகளுக்கான செலவினங்கள் குறித்து அந்த காலத்திற்குள் தேவையான நிதி சப்ரகமுவ மாகாண சபை நிதியில் இருந்து பணமாகவோ அல்லது முற்பணமாகவோ செலுத்துவதற்கு வசதிகளை அனுமதித்தல், சப்ரகமுவ மகாண சபை நிதிக்கு அந்த நிதி திரும்ப செலுத்துவதற்கு ஏற்பாடுகளை செய்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கான உத்தரவு.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்ரகமுவ மாகாண ஆளுநராகிய என்னால் இது அறிவிக்கப்படுகிறது.

*அனுமதி பெற்றுக்கொள்ளல்*

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்ரகமுவ மாகாணத்தின் ஆறாவது (6) மாகாண சபையின் பதவி காலம் 2017 செத்தெம்பர் 26 ஆம் திகதி அன்று முடிவடைந்ததால், 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம் கொண்ட சப்ரகமுவ மாகாண சபைச் சட்டத்தின் 27(அ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு

வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 2022 சனவரி மாதம் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2022 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் ஒரு வருட காலத்திற்காக சப்ரகமுவ மாகாண சபையின் சேவைச் செலவு குறித்து தேவைக்காக மதிப்பிடப்பட முப்பத்தேழு பில்லியன் நூற்று எண்பத்தொன்பது மில்லியன் (ரூ. 37,189,000,000) சப்ரகமுவ மாகாண சபையின் செலவுகளை சப்ரகமுவ மாகாண சபை நிதியில் இருந்து ஏற்க, அந்த மாகாணத்தின் பிரதான செயலாளருக்கும் மற்றும் கணக்கியல் அதிகாரிக்கும் இதன் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

*2022ம் ஆண்டுக்கான ஒதுக்கீடு*

2\. (1) குறிப்பிட்ட தொகையைச் செலவழிக்க அதிகாரம் வழங்குவதுடன் வேறு எந்த சட்டத்திற்கும் பாதிப்பு ஏற்படாதவாறு, இந்த கட்டுப்பாடு "ஒரு வருட" காலம் என குறிப்பிடப்பட்டுள்ளது. 2022 சனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2022 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் காலத்திற்கமைய சேவைச் செலவு குறித்து தேவையான மதிப்பிடப்பட்ட முப்பத்தேழு பில்லியன் நூற்று எண்பத்தொன்பது மில்லியன் (ரூ. 37,189,000,000) சப்ரகமுவ மாகாண சபையின் செலவு:-

(அ) சப்ரகமுவ மாகாண நிதியில் அல்லது பனமாகவோ முற்பணமாக செலுத்துவதற்கு இதன் மூலம் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளில் இருந்து, மற்றும்

(ஆ) சப்ரகமுவ மாகாணத்தில் கடனாக பெற்றுக் கொள்ளப்படும் நிதியில் சப்ரகமுவ மாகாண சபையால் பெற்றுக் கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட கடன்களாக பெற்றுக் கொள்ளப்படும் நிதியில் செலுத்த வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள முப்பத்தேழு பில்லியன் நூற்று எண்பத்தொன்பது மில்லியன் (ரூ. 37,189,000,000) நிதி இந்த உத்தரவின் முதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளப்படி செலவிடலாம்.

(2) இந்த பிரிவில் (1) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகள் சப்ரகமுவ மாகாண சபைக்காக மற்றும் அதற்கான கடன்களைப் பெறுவதற்கு அங்கீகாரம் அளிக்கும் வேறு எந்த எழுத்துப் பூர்வ சட்டத்தின் விதிகளுக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் செயற்படுத்த வேண்டும்.

*2022ம் ஆண்டிற்கான சப்ரகமுவ மாகாண சபையின் சில நடவடிக்கைகளுக்காக நிதி வழங்கல்*

3\. (1) 2022 நிதியாண்டு காலத்திற்குள், இந்த ஆணையின் இரண்டாவது உப அட்டவணையின் iv ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு நடவடிக்கையின் போதும் சப்ரகமுவ மாகாண சபைக்கு கிடைக்கும் vi ஆவது பிரிவில் குறிப்பிட்டு கிடைக்கும் அந்த நடவடிக்கையின் போது கணக்கிற்கு வைப்பு செய்வதோடு, அவ்வாறு வைப்பிலிடப்பட்டு கிடைக்கப் பெறும் வருவாயில், vi வரிகளில் காணப்படும் இறுதி எல்லை குறையக் கூடாது.

4\. இந்த ஆணையானது 2வது உப அட்டவணையின் iv யில் பந்தியில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு நடவடிக்கை சம்பந்தமாக, 2022 நிதியாண்டி சப்ரகமுவ மாகாண சபையின் ஊடாக செய்யப்படும் செலவு, அந்த காலப்பகுதியில் அந்த நடவடிக்கையில் சப்ரகமுவ மாகாண சபைக்கு கிடைக்கும் வருவாயில் செலுத்த முடியும். அத்துடன் அந்த செலவு அந்த உப அட்டவணையில் v பந்தியில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உச்ச எல்லையை விட அதிகமாக இருத்தல் ஆகாது.

5\. இந்த அட்டவணையில் 2வது அட்டவணியல் iv பந்தியில் குறிப்பிட்டுள்ள எந்த செயல்கள் சம்பந்தமாகவும் 2022 ம் ஆண்டின் இறுதியில் நிலுவைத் தொகையானது, அந்த அட்டவணை vii யில் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உச்ச எல்லையை விட அதிகமாக இருத்தல் ஆகாது.

*2022ம் வருடத்திற்குள் மூன்றாவது பிரிவில் குறிப்பிட்டுள்ள நடவடிக்கை தொடர்பான செலவு குறித்து சப்ரகமுவ மாகாண சபை நிதியில் அல்லது பணத்தில் முற்பணம் செலுத்தல்*

6\. 2022 நிதியாண்டில் எந்த நேரத்திலும் இந்த ஆணையானது 2வது அட்டவணையின் iv யில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த நடவடிக்கையில் இருந்தும் சப்ரகமுவ மாகாண சபைக்கு கிடைக்கும் வரவுகள், அந்த நடவடிக்கை சம்பந்தமாக, சப்ரகமுவ மாகாண சபையினால் ஏற்படும் செலவீனங்களை ஈடு செய்ய போதுமானதாக இல்லையென்றால், அந்த செலவீனங்களை ஈடு செய்வதற்காக ஆளுநரால் கருதும் நிதி சப்ரகமுவ மாகாண நிதியில் அல்லது நிதி முற்பணமாக செலுத்தப்பட்டு அவரின் உத்தரவின் மூலம் அவ்வப்போது உத்தரவிடப்படலாம். எவ்வாறாயினும் அத்தகைய முற்பணங்களின் மொத்தத் தொகை அந்த அட்டவணையில் ஐந்தாவது பிரிவில் தொடர்புடைய குறிப்பில் காட்டப்பட்டுள்ள அதிகபட்ச செலவின் வரம்பை விட அதிகமாக இருக்க கூடாது. அந்த நடவடிக்கைக்களுக்காக முற்பணமாக வழங்கப்பட்ட எந்த ஒரு பணமும், எனது உத்தரவின்படி சப்ரகமுவ மாகாண சபை நிதிக்கு திருப்பி செலுத்த வேண்டும்.

7. (1) இந்த உத்தரவானது முதலாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ள சில திட்டத்தின் கீழ் தொடர் செலவினங்களுக்கு அந்த அட்டவணையின் விதிகளின் படி ஒதுக்கப்பட்டுள்ள, அந்த தொகையானது செலவழிக்கப்படாது அல்லது எதிர்காலத்தில் செலவு செய்யக்கூடாது என எதிர்பார்க்கப்படும் சில நிதி, அந்த திட்டத்தில் மூலதன செலவாகவோ அல்லது வேறொரு திட்டம் தொடர் அல்லது மூலதன செலவாகவோ வேறு ஒதுக்கீடாகவோ பிரதான செயலாளருக்கோ அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறு அதிகாரிக்கோ உரிய முறையில் மாற்ற முடியும்.

திட்டத்தின் தொடர்செலவீனங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஆனால் செலவு செய்யப்படாத நிதி அந்த திட்டத்திலேயே வேறு ஒன்றிற்கோ அல்லது அந்த ஒதுக்கீடு குறித்த செலவீன விடயத்தின் கீழுள்ள வேறு திட்டத்திற்கோ மாற்றுவதற்கான அனுமதி

(2) இந்த உத்தரவானது முதலாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ள மூலதன செலவுக்கு ஒதுக்கப்படும் நிதி அந்த தலைப்பின் திட்டத்திலோ அல்லது செயற்றிட்டத்திற்கு புறம்பாக மாற்றுவதற்கு பிரதான செயளாளருக்கு மட்டும் முடியும்.

8. (1) அங்கீகரிக்கப்பட்ட செலவுகளை ஈடுகட்ட வரிகள் மற்றும் வேறு வழிகளில் கிடைக்கும் நிதியானது, எதிர்பார்க்கப்படும் தொகையை விட குறைவாக இருக்கலாம்: அல்லது

(2) ஒரு சில செயல்கள் அல்லது செயற்பாடுகள் காரணமாக ஒதுக்கப்பட்ட தொகை மேலும் தேவையில்லை என ஆளுநர் திருப்தி அடைந்தால், சப்ரகமுவ மாகாண சபை நிதியிலோ அல்லது பணத்தில், தம்மால் வழங்கப்பட்ட உரிமைப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் செலவு செய்வதற்கு முன்பு விடுவிக்கப்பட்ட பணம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நீக்குவதற்கு ஆளுநருக்கு செய்ய முடியும்.

9. ஆளுநர் மூலம்:-

இந்த உத்தரவு இரண்டாவது துணை அட்டவணையில் காட்டும் உச்ச மற்றும் குறைந்த எல்லை மற்றும் செய்தல் ஆளுநருக்கு உள்ள அதிகாரம்

(அ) இந்த உத்தரவின் படி இரண்டாவது அட்டவணையில் v ஆம் பிரிவில், vii ஆம் பிரிவில் மற்றும் viii ஆகியவற்றில் காட்டும் அதிகபட்ச வரம்புகள் எதுவும் இல்லை.

(ஆ) இந்த உத்தரவின் படி இரண்டாவது அட்டவணையின் vi யில் வரிசையில் உள்ள குறைந்த பட்சம்: விதி முறைகளின்படி 2023 மே மாதம் 31 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்போ, மாற்றுவதற்கோ அல்லது இணைக்கவோ முடியும்.

இந்த பிரிவின் கீழ் செய்யப்பட்ட எந்த விதிமுறையும் ஆளுநர் மூலம் அவை அனுமதிக்கப்படாவிட்டால், அமுல்படுத்தப்படமாட்டாது.

அத்தகைய ஒரு விதி நிறைவேற்றப்படுவது குறிப்பிட்ட திகதியில், அந்த திகதிக்கு முன் தினமிருந்து அது நடைமுறைக்கு வர வேண்டும் என்று வெளிப்படையாக குறிப்பிடப்பட்டிருந்தால் அது குறிப்பிடப்பட்டுள்ள திகதி முதல் நடைமுறைக்கு வந்ததாக கருத வேண்டும்.

10. ஆளுநரால், எழுத்து மூல உத்தரவின் படி, இந்த உத்தரவு இரண்டாவது உப அட்டவணையின் பொருத்தமான வரிசையில் சில வேலையில் சேர்த்தல் மற்றும்:-

(அ) அந்த நடவடிக்கை சம்பந்தமாக அனைத்து உச்ச எல்லையோ அல்லது சில எல்லை,
(ஆ) அந்த நடவடிக்கை சம்பந்தாக குறைந்த பட்ச எல்லை சேர்த்து அந்த அட்டவணை திருத்தம் செய்யப்படலாம்.

11. இந்த அனுமதி சப்ரகமுவ மாகாணத்தின் ஏழாவது (7) மாகாண சபை கூட்டப்படும் திகதியோ அல்லது மாகாண சபை நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதி முதலோ அல்லது அதற்கு முன்பிருந்தோ மூன்று மாத காலம் முடிவடையும் தினத்திலோ அல்லது 2022 திசெம்பர் 31 ஆம் திகதியோ அல்லது இரண்டு நாட்களுக்கு முன்பு முடிவடையும்.

**டிக்கிரி கொப்பேகடுவ**,
கௌரவ ஆளுநர் - சப்ரகமுவ மாகாணம்

*2021, நவம்பர் 29.*

## முதலாவது அட்டவணை

மாகாண சபை பொது சேவைகளுக்கு செலுத்த வேண்டிய தொகை விடயம் 800 முதல் 861 வரை

| | |
|---|---|
| தொடர்ச்சியான செலவு | 34,132,000,000 |
| மூலதன செலவு | 3,057,000,000 |
| மொத்தம் | 37,189,000,000 |

| விடயம் | நிறுவனங்கள் மற்றும் வேலைத்திட்டம் | தொடர்ச்சியான செலவு ரூபா | மூலதன செலவு ரூபா |
|---|---|---|---|
| 800 | கௌவர ஆளுநர் அலுவலகம் | | |
| | 03 ஆவது செயற்றிட்டம்- மாகாண நிர்வாகம் | 83,919,000 | 2,340,000 |
| 801 | மாகாணசபை செயலாளர் அலுவலகம் | | |
| | 03 ஆவது செயற்றிட்டம்- மாகாண நிர்வாகம் | 190,045,000 | 1,000,000 |
| 802 | மாகாண அரச சேவை ஆணைக்குழு அலுவலகம் | | |
| | 03 ஆவது செயற்றிட்டம்- மாகாண நிர்வாகம் | 24,020,000 | 1,000,000 |
| 803 | கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு அலுவலகம் | | |
| | 03 ஆவது செயற்றிட்டம்- மாகாண நிர்வாகம் | 12,785,000 | - |
| 804 | பிரதான செயலாளர் | | |
| | 03 ஆவது செயற்றிட்டம்- மாகாண நிர்வாகம் | 265,425,000 | 291,660,000 |
| 805 | பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) | | |
| | 03 ஆவது செயற்றிட்டம்- மாகாண நிர்வாகம் | 41,195,000 | - |
| 806 | பிரதி பிரதான செயலாளர் (நிதி முகாமைத்துவம்) | | |
| | 03 ஆவது செயற்றிட்டம்- மாகாண நிர்வாகம் | 61,388,000 | - |
| 807 | பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) | | |
| | 03 ஆவது செயற்றிட்டம்- மாகாண நிர்வாகம் | 62,356,000 | - |
| 808 | பிரதி பிரதான செயலாளர் (பொறியியற் சேவைகள்) | | |
| | 50 ஆவது செயற்றிட்டம்- கட்டுமானம் மற்றும் வீதி பராமரிப்பு | 312,850,000 | - |
| 809 | மாகாண வருமான திணைக்களம் | | |
| | 03 ஆவது செயற்றிட்டம் - மாகாண நிர்வாகம் | 80,941,000 | - |
| 810 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்தியம், மற்றும் மகளிர் விவகாரம், கூட்டுறவு வியாபாரம் மற்றும் உணவு, பயணிகள் போக்குவரத்து, மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடகம் மற்றும் வீடமைப்பு, நிர்மானத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | | |
| | 03 ஆவது செயற்றிட்டம்- மாகாண நிர்வாகம் | 168,238,000 | 32,000,000 |

| விடயம் | நிறுவனங்கள் மற்றும் வேலைத்திட்டம் | தொடர்ச்சியான செலவு ரூபா | மூலதன செலவு ரூபா |
|---|---|---|---|
| | 47 ஆவது செயற்றிட்டம் - போக்குவரத்து திட்டம் | 40,000,000 | 25,000,000 |
| | 49 ஆவது செயற்றிட்டம் - மின்சாரம் மற்றும எரிசக்தி சேவை | | 10,000,000 |
| | 53 ஆவது செயற்றிட்டம் - கூட்டுறவு அபிவிருத்தி | | 5,000,000 |
| | 60 ஆவது செயற்றிட்டம் - சமூக அபிவிருத்தி | | 197,000,000 |
| | 61 ஆவது செயற்றிட்டம் - வீடமைப்பு மற்றும் சமூக பொது வசதிகள் | 2,685,000 | 20,000,000 |
| | 63 ஆவது செயற்றிட்டம் - பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தோட்ட வீடமைப்பு | | 33,000,000 |
| | 71 ஆவது செயற்றிட்டம் - வைத்தியசாலை சேவைகள் | | 630,000,000 |
| | 72 ஆவது செயற்றிட்டம் - பொது சுகாதார சேவைகள் | | 210,000,000 |
| | 73 ஆவது செயற்றிட்டம் - உள்நாட்டு வைத்திய சேவைகள் | | 60,000,000 |
| | 93 ஆவது செயற்றிட்டம் - சமய விவகார மற்றும் கலாசார நடவடிக்கை | | - |
| | 96 ஆவது செயற்றிட்டம் - மகளிர் அபிவிருத்தி | | 9,000,000 |
| 811 | சுகாதார திணைக்களம் | | |
| | 03 ஆவது செயற்றிட்டம் - மாகாண நிர்வாகம் | 288,000,000 | |
| | 71 ஆவது செயற்றிட்டம் - வைத்தியசாலை சேவைகள் | 8,133,241,500 | |
| | 72 ஆவது செயற்றிட்டம் - பொது சுகாதார சேவைகள் | 1,527,000,000 | |
| 812 | ஆயுர்வேத திணைக்களம் | | |
| | 73 ஆவது செயற்றிட்டம் - உள்நாட்டு வைத்திய சேவைகள் | 584,065,000 | |
| 813 | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | | |
| | 53 ஆவது செயற்றிட்டம் - கூட்டுறவு அபிவிருத்தி | 120,887,000 | |
| 814 | உள்ளூராட்சி திணைக்களம் | | |
| | 60 ஆவது செயற்றிட்டம் - சமூக அபிவிருத்தி | 2,712,405,000 | |
| 820 | மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய அடிப்படை வசதிகள் மற்றும் உல்லாசப் பிராயணத்துறை மற்றும் விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சு | | |
| | 03 ஆவது செயற்றிட்டம் - மாகாண நிர்வாகம் | 102,540,000 | |
| | 50 ஆவது செயற்றிட்டம் - கட்டுமானம் மற்றும் வீதி பராமரிப்பு | 510,000,000 | 300,000,000 |
| | 52 ஆவது செயற்றிட்டம் - பிரதேச அபிவிருத்தி | | 20,000,000 |
| | 90 ஆவது செயற்றிட்டம் - பொழுது போக்கு மற்றும் விளையாட்டு | | 50,000,000 |
| 821 | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் | | |
| | 90 ஆவது செயற்றிட்டம் - பொழுது போக்கு மற்றும் விளையாட்டு | 80,050,000 | |
| 830 | சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு | | |

| விடயம் | நிறுவனங்கள் மற்றும் வேலைத்திட்டம் | தொடர்ச்சியான செலவு ரூபா | மூலதன செலவு ரூபா |
|---|---|---|---|
| | 03 ஆவது செயற்றிட்டம் - மாகாண நிர்வாகம் | 70,856,000 | - |
| | 51 ஆவது செயற்றிட்டம் - கைத்தொழில் அபிவிருத்தி | | 48,000,000 |
| | 60 ஆவது செயற்றிட்டம் - சமூக அபிவிருத்தி | 44,685,000 | 64,000,000 |
| | 95 ஆவது செயற்றிட்டம் - சமூக பாதுகாப்பு | | 90,000,000 |
| 831 | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | | |
| | 51 ஆவது செயற்றிட்டம் - கைத்தொழில் அபிவிருத்தி | 166,733,000 | |
| 832 | நன்னடத்தைகள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் | | |
| | 95 ஆவது செயற்றிட்டம் - சமூக பாதுகாப்பு | 397,924,000 | |
| 840 | கல்வி, தகவல் தொழிநுட்பம் கலாசார விவகார அமைச்சு | | |
| | 03 ஆவது செயற்றிட்டம் - மாகாண நிர்வாகம் | 124,803,100 | 19,000,000 |
| | 80 ஆவது செயற்றிட்டம் - ஆரம்பக் கல்வி | | 108,000,000 |
| | 81 ஆவது செயற்றிட்டம் - இடைநிலைக் கல்வி | 135,000,000 | 536,000,000 |
| | 93 ஆவது செயற்றிட்டம் - சமய மற்றும் கலாசார நடவடிக்கைகள் | 18,033,600 | 10,000,000 |
| 841 | கல்வித் திணைக்களம் | | |
| | 03 ஆவது செயற்றிட்டம் - மாகாண நிர்வாகம் | 660,400,000 | |
| | 80 ஆவது செயற்றிட்டம் - ஆரம்பக் கல்வி | 5,673,300,000 | |
| | 81 ஆவது செயற்றிட்டம் - இடைநிலைக் கல்வி | 10,566,050,000 | |
| | 87 ஆவது செயற்றிட்டம் - கல்வி பங்கேற்றலை மேம்படுத்தல் | 27,760,000 | |
| | 88 ஆவது செயற்றிட்டம் - கல்வி திட்டமிடல், நிர்வகித்தல், சேவை வழங்கல் | 12,220,000 | |
| 850 | காணி, நீர்ப்பாசன, விவசாய மற்றும் கால்நடை உற்பத்தி, கால்நடை சுகாதாரம் மற்றும் மீன்பிடி அமைச்சு | | |
| | 03 ஆவது செயற்றிட்டம் - மாகாண நிர்வாகம் | 77,966,000 | 1,500,000 |
| | 40 ஆவது செயற்றிட்டம் - காணி நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி | | 8,000,000 |
| | 43 ஆவது செயற்றிட்டம் - நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் | 50,000,000 | 60,000,000 |
| | 44 ஆவது செயற்றிட்டம் - விவசாய அபிவிருத்தி | | 110,000,000 |
| | 45 ஆவது செயற்றிட்டம் - கால்நடை அபிவிருத்தி | | 93,000,000 |
| | 55 ஆவது செயற்றிட்டம் - உணவு பாதுகாப்பு மற்றும் பராமரித்தல் | | 12,500,000 |
| 851 | காணி ஆணையாளர் திணைக்கம் | | |
| | 40 ஆவது செயற்றிட்டம் - காணி நிர்வாகம் மற்றும் அபிவிரு-த்தி | 79,287,000 | |

| விடயம் | நிறுவனங்கள் மற்றும் வேலைத்திட்டம் | தொடர்ச்சியான செலவு ரூபா | மூலதன செலவு ரூபா |
|---|---|---|---|
| 852 | விவசாய திணைக்களம் | | |
| | 44 ஆவத செயற்றிட்டம் - விவசாய அபிவிருத்தி | 289,525,000 | |
| 853 | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரம் திணைக்களம் | | |
| | 45 ஆவது செயற்றிட்டம் - கால்நடை அபிவிருத்தி | 305,040,000 | |
| 861 | மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களம் | | |
| | 03 ஆவது செயற்றிட்டம் - மாகாண நிர்வாகம் | 28,381,800 | |
| | | **34,132,000,000** | **3,057,000,000** |

**இரண்டாவது துணை அறிக்கை**

2022 - மதிப்பீடு

முற்பண கணக்கியல் செயற்பாடுகள்

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| அமைச்சு /திணைக்களம் | | குறியீட்டு இலக்கம் | முற்பண வகைகள் | அதி உயர் செலவு எல்லை | குறைந்த பட்ச பெறுகை எல்லை | இருப்பின் அதிகபட்ச எல்லை | அதிகபட்ச வைப்பு எல்லை |
| முழுத்தொகை | | | | 2,553,650,000 | 858,126,500 | 7,380,876,450 | 3,250,000 |
| மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு | | | உப தொகை | 2,419,400,000 | 8000,586,500 | 7,334,856,450 | - |
| 1 | கௌரவ ஆளுநர் அலுவலகம் | 80001 | மாகாண அ : ஊ முற்பணம் | 2,000,000 | 700,000 | 6,665,000 | - |
| 2 | மாகாணசபை செயலாளர் அலுவலகம் | 80101 | மாகாண அ : ஊ முற்பணம் | 1,600,000 | 850,000 | 5,260,000 | - |
| 3 | மாகாண அரச சேவை ஆணைக்குழு அலுவலகம் | 80201 | மாகாண அ : ஊ முற்பணம் | 1,200,000 | 600,000 | 4,672,500 | - |
| 4 | கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு அலுவலகம் | 80301 | மாகாண அ : ஊ முற்பணம் | 1,000,000 | 300,000 | 3,094,950 | - |
| 5 | பிரதான செயலாளர் | 80401 | மாகாண அ : ஊ முற்பணம் | 20,000,000 | 9,000,000 | 60,000,000 | - |
| 6 | பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) | 80501 | மாகாண அ : ஊ முற்பணம் | 3,500,000 | 800,000 | 9,000,000 | - |
| 7 | பிரதி பிரதான செயலாளர் (நிதி முகாமைத்துவம்) | 80601 | மாகாண அ : ஊ முற்பணம் | 8,000,000 | 1,457,000 | 13,623,000 | |
| 8 | பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) | 80701 | மாகாண அ : ஊ முற்பணம் | 6,000,000 | 2,500,000 | 16,900,000 | |
| 9 | பிரதி பிரதான செயலாளர் (பொறியியற் சேவைகள்) | 80801 | மாகாண அ : ஊ முற்பணம் | 21,000,000 | 8,000,000 | 73,000,000 | - |
| 10 | மாகாண வருமான திணைக்களம் | 80901 | மாகாண அ : ஊ முற்பணம் | 4,000,000 | 2,300,000 | 14,000,000 | - |

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| அமைச்சு /திணைக்களம் | | குறியீட்டு இலக்கம் | முற்பண வகைகள் | அதி உயர் செலவு எல்லை | குறைந்த பட்ச பெறுகை எல்லை | இருப்பின் அதிகபட்ச எல்லை | அதிகபட்ச வைப்பு எல்லை |
| 11 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்தியம், மற்றும் மகளிர் விவகாரம், கூட்டுறவு வியாபாரம் மற்றும் உணவு, பயணிகள் போக்குவரத்து, மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடகம் மற்றும் வீடமைப்பு, நிர்மானத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81001 | மாகாண அ : ஊ முற்பணம் | 6,200,000 | 3,744,000 | 32,456,000 | - |
| 12 | சுகாதார திணைக்களம் | 81101 | மாகாண அ : ஊ முற்பணம் | 500,000,000 | 123,000,000 | 1,621,000,000 | - |
| 13 | ஆயுர்வேத திணைக்களம் | 81201 | மாகாண அ : ஊ முற்பணம் | 27,000,000 | 15,000,000 | 74,000,000 | - |
| 14 | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | 81301 | மாகாண அ : ஊ முற்பணம் | 9,000,000 | 4,000,000 | 24,300,000 | - |
| 15 | உள்ளூராட்சி திணைக்களம் | 81401 | மாகாண அ : ஊ முற்பணம் | 4,900,000 | 3,000,000 | 18,150,000 | - |
| 16 | மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய அடிப்படை வசதிகள் மற்றும் உல்லாசப் பிராயணத்துறை மற்றும் விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சு | 82001 | மாகாண அ : ஊ முற்பணம் | 2,500,000 | 1,900,000 | 9,695,800 | - |
| 17 | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் | 82101 | மாகாண அ : ஊ முற்பணம் | 2,000,000 | 910,000 | 5,130,400 | - |
| 18 | சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு | 83001 | மாகாண அ : ஊ முற்பணம் | 8,000,000 | 3,075,500 | 27,428,800 | - |
| 19 | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | 83101 | மாகாண அ : ஊ முற்பணம் | 14,000,000 | 9,750,000 | 30,250,000 | - |
| 20 | நன்னடத்தைகள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் | 83201 | மாகாண அ : ஊ முற்பணம் | 12,000,000 | 3,800,000 | 37,200,000 | - |
| 21 | கல்வி, தகவல் தொழிநுட்பம் கலாசார விவகார அமைச்சு | 84001 | மாகாண அ : ஊ முற்பணம் | 9,500,000 | 3,000,000 | 30,900,000 | - |
| 22 | கல்வித் திணைக்களம் | 84101 | மாகாண அ : ஊ முற்பணம் | 1,700,000,000 | 575,000,000 | 5,055,000,000 | - |
| 23 | காணி, நீர்ப்பாசன, விவசாய மற்றும் கால்நடை சுகாதாரம் மற்றும் மீன்பிடி அமைச்சு | 85001 | மாகாண அ : ஊ முற்பணம் | 7,000,000 | 2,000,000 | 20,500,000 | - |
| 24 | காணி ஆணையாளர் திணைக்களம் | 85101 | மாகாண அ : ஊ முற்பணம் | 7,500,000 | 4,500,000 | 23,000,000 | - |

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சு /திணைக்களம் | குறியீட்டு இலக்கம் | முற்பண வகைகள் | அதி உயர் செலவு எல்லை | குறைந்த பட்ச பெறுகை எல்லை | இருப்பின் அதிகபட்ச எல்லை | அதிகபட்ச வைப்பு எல்லை |
| 25 | விவசாய திணைக்களம் | 85201 | மாகாண அ : ஊ முற்பணம் | 25,000,000 | 13,000,000 | 84,580,000 | - |
| 26 | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | 85301 | மாகாண அ : ஊ முற்பணம் | 15,000,000 | 7,500,000 | 29,000,000 | - |
| 27 | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | 86101 | மாகாண அ : ஊ முற்பணம் | 15,000,000 | 900,000 | 6,050,000 | - |
| | ஏனைய முற்பண கணக்குகள் | | உப தொகை | 134,250,000 | 57,540,000 | 46,020,000 | - |
| 28 | மாகாணசபை செயலாளர் அலுவலகம் | 80102 | சபை உறுப்பினர்களுக்கு பல்வேறு முற்பணம் | 26,400,000 | 2,100,000 | 24,000,000 | - |
| 29 | முகாமைத்துவ பயிற்சி நிலையம் - புஸ்ஸல்ல | 80502 | பயிற்சி நிலையத்தின் முற்பணக் கணக்கு | 9,000,000 | 3,500,000 | 500,000 | 50,000 |
| 30 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்தியம், மற்றும் மகளிர் விவகாரம், கூட்டுறவு வியாபாரம் மற்றும் உணவு, பயணிகள் போக்குவரத்து, மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடகம் மற்றும் வீடமைப்பு, நிர்மானத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81002 | கணினி செயற்றிட்டம் | 350,000 | 140,000 | 270,000 | - |
| 31 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்தியம், மற்றும் மகளிர் விவகாரம், கூட்டுறவு வியாபாரம் மற்றும் உணவு, பயணிகள் போக்குவரத்து, மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடகம் மற்றும் வீடமைப்பு, நிர்மானத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81004 | சப்ரகமுவ மாகாண கேட்போர்கூட முற்பணக் கணக்கு | 1,200,000 | 1,000,000 | 250,000 | |
| 32 | ஆயுர்வேத திணைக்களம் | 81202 | பின்னவல பங்சகரும நிலையம் | 1,800,000 | 300,000 | 500,000 | 500,000 |
| 33 | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | 83102 | ஆடை வேலைத்தளங்கள் அமைத்தல் மற்றும் நிர்வாகம் | 52,000,000 | 20,000,000 | 10,000,000 | 1,000,000 |

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| அமைச்சு /திணைக்களம் | | குறியீட்டு இலக்கம் | முற்பண வகைகள் | அதி உயர் செலவு எல்லை | குறைந்த பட்ச பெறுகை எல்லை | இருப்பின் அதிகபட்ச எல்லை | அதிகபட்ச வைப்பு எல்லை |
| 34 | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | 83103 | சிறு கைத்தொழில் வேலைத்-தளங்கள் அமைத்தல் மற்றும் நிர்வாகம் | 9,500,000 | 8,000,000 | 8,000,000 | 1,000,000 |
| 35 | கல்வி, தகவல் தொழிநுட்பம் | 84002 | மெனேரிப்ட்டி - அடலுகம கல்வி அபிவிருத்தி நிலையத்தின் முன்பணக் கணக்கு | 16,000,000 | 10,000,000 | 2,000,000 | 500,000 |
| 36 | விலங்கு உற்பத்தி மற்றும் சுக-ாதார திணைக்களம் | 85302 | உதுகொட கால்நடை அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தின் முற்பணக் கணக்கு | 18,000,000 | 12,500,000 | 500,000 | 200,000 |

EOG 02 - 0423/1

**அதிகாரியின் பலம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்ரகமுவ மாகாணத்தின் ஆறாவது (6) மாகாண சபையின் பதவிக் காலம் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி அன்று முடிவடைந்ததால், 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம் கொண்ட சப்ரகமுவ மாகாண சபை சட்டத்தின் 27(அ) பிரிவின் படி எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இந்த மாகாண சபையின் 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01ம் திகதி ஆரம்பித்து 2022 திசெம்பர் மாதம் 31 ம் திகதி முடிவடையும் ஒரு வருட கால எல்லைக்குள் சப்ரகமுவ மாகாண சபையின் சேவை செலவுக்காக மதிப்பிடப்பட்டுள்ள முப்பத்து ஏழு பில்லியனே நூற்று எண்பத்தொன்பது மில்லியன் (37,189,000,000 ரூபா சப்ரகமுவ மாகாண சபையின் செலவை சப்ரகமுவ மாகாண சபையின் நிதியில் செலவு செய்ய அந்த மாகாண பிரதான செயலாளருக்கும் மற்றும் கணக்கு அதிகாரிக்கும் இதன் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதி சப்ரகமுவ மாகாணத்தின் ஏழாவது (7) மாகாண சபை கூட்டத்திற்கு அழைக்கும் திகதியிலோ, மாகாண சபை செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதியில் இருந்தோ அல்லது மூன்று மாத (3) காலம் முடிவடையும் திகதியிலோ அல்லது 2022 திசெம்பர் மாதம் 31 ம் திகதியிலோ அல்லது இரண்டு நாட்கள் முன்பு முடிவடைகிறது.

**டிக்கிரி கொப்பேகடுவ,**
கௌரவ ஆளுநர் - சப்ரகமுவ மாகாணம்

2021, நவம்பர் 29.

EOG 02 - 0423/ 2

**அதிகாரியின் பலம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்ரகமுவ மாகாணத்தின் ஆறாவது (6) மாகாண சபையின் பதவி காலம் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி அன்று முடிவடைந்ததால், 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம் கொண்ட சப்ரகமுவ மாகாண சபை சட்டத்தின் 27(அ) ஆம் பிரிவின் படி எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இந்த மாகாண சபையின் 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01ம் திகதி ஆரம்பித்து 2022 திசெம்பர் மாதம் 31ம் திகதி முடிவடையும் ஒரு வருட கால எல்லைக்குள் சப்ரகமுவ மாகாண சபையின் மூலதன கணக்கு நடவடிக்கைகளுக்காக தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ள இந்த இரண்டாவது (II) அட்டவணையின் செலவு சப்ரகமுவ மாகாண சபையின் நிதியில் இருந்து செலவு செய்ய அந்த மாகாணத்தின் பிரதான செயலாளருக்கும் மற்றும் கணக்கு அதிகாரிக்கும் இதன் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

*இந்த அனுமதி சப்ரகமுவ மாகாணத்தின் ஏழாவது (7) மாகாண சபை கூட்டத்திற்கு அழைக்கும் திகதியிலோ, மாகாண சபை செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதியில் இருந்தோ அல்லது மூன்று மாத (3) காலம் முடிவடையும் திகதியிலோ அல்லது 2022 திசெம்பர் மாதம் 31 ம் திகதியிலோ அல்லது இரண்டு நாட்கள் முன்பு முடிவடைகிறது.*

**டிக்கிரி கொப்பேகடுவ,**
கௌரவ ஆளுநர் - சப்ரகமுவ மாகாணம்

*2021, நவம்பர் 29.*

EOG *02 - 0423/ 3*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.